சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.05.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். NC 2995/E/2021 (SA 2170/E/2021, SA 2171/E/2021, SA 2172/E/2021)**

திரு.க.முருகேஷ் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்
(பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
திருச்சி மாவட்டம் .

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 21.08.2025 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலர் திரு.அதியமான் கவியரசு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), திருச்சி அவர்கள் இவ்வாணையத்தில் 06.05.2026-ல் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 21.08.2025 தேதியிட்ட இவ்வாணைய உத்தரவின்படி, இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பான ஆவணங்களை மனுதாரர் 12.11.2025 அன்று பொது அதிகார அமைப்பில் ஆஜராகி, 1942 முதல் 2000 வரை உள்ள ஆவணம் கோரியதில், 1970-ஆம் ஆண்டு முன்னர் உள்ள ஆவணங்கள் ஏதும் அலுவலக பதிவறையில் பராமரிப்பில் இல்லை எனவும், 1970-ஆம் ஆண்டு முதல் தான் ஆவணம் உள்ளன என கூறி மனுதாரர் ஆவணங்களை பார்வையிட்டதில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், செங்குளம் கிராமம், சர்வே எண்.25/2-ற்கான 1970-ஆம் ஆண்டு UDR-க்கு முந்தைய அ-பதிவே மற்றும் FMB ஆவண நகலினை பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), திருச்சி அவர்களிடமிருந்தும், மேற்படி கிராம சர்வே எண்.25/2-ற்கான 1970-ஆம் ஆண்டு UDR-க்கு முன்பு உள்ள அ-பதிவே ஆவண நகலினை தொழில்நுட்ப மேலாளர், நிலஅளவை பதிவேடுகள் துறை, திருச்சிராப்பள்ளி அவர்களிடமிருந்தும் மனுதாரர் பெற்றுக்கொண்டு, ஏற்பளிப்பு செய்து

கையொப்பம் செய்துள்ளதற்கான ஆவணங்களுடன் கூடிய அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

3. இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பாக ஆணையத்தின் 21.08.2025 தேதியிட்ட உத்தரவு நிறைவேற்றப்பட்டு, மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் NC 2995/E/2021**
**(SA 2170/E/2021, SA 2171/E/2021, SA 2172/E/2021)**
**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/ தொழில்நுட்ப மேலாளர்,
நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
திருச்சி.

**மேல்முறையீட்டாளர்**
திரு.க.முருகேஷ்,
9/9, 5வது தெரு,
கீழப்புதூர், பாலக்கரை, திருச்சிராப்பள்ளி-600 001.

Copy to: File MP/PA,